RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s543

# புரட்சிக் கவி எழுத்தில் கட்டுண்ட கைம்மைப்பெண் மறுவாழ்வியல்

**வே. வளர்மதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு-638012, தமிழ்நாடு, இந்தியா

# The Widow's Reincarnation bound in Revolutionary Poetic Writing

**V. Valarmathi** [a, *]

[a] Department of Tamil, Vellalar College for Women (Autonomous), Erode-638012, Tamil Nadu, India

* Corresponding Author: mathiponnu@gmail.com

Received: 08-08-2021
Revised: 19-06-2022
Accepted: 12-07-2022
Published: 25-08-2022

Check for updates

## ABSTRACT

When Bharathiar sings about women and their problems, he sings that women should fight for the freedom of the country and fight for their freedom. He has also elevated women to motherhood as a symbol of power. But Bharathidasan looks closely at the problems of women's lives and analyses and sings the social problems of women, such as widowhood, superstition, child marriage, etc. Bharathidasan tried to eliminate the disadvantages faced by women in society. In general, he warns men that he does not want to justify everything that men do in society. The situation of women in our country is very deplorable. From the foot to the top, the whole body should be corrected. It must be said that the slavery of women is due to the superstitious practices of our country. Pavendar Bharathidasan can be regarded as someone who worked hard to change the situation of women by associating himself with Periyar's rationality and ideas. While women's society cannot be completely reformed, there is a sense of reform among semi-educated women. The remarriage of the widow can be specifically pointed out. Through his works, it can be said that Pavendar Bharathidasan was the one who sowed the seeds of widow remarriage.

**Keywords:** Bharathidasan, Widow, Bharathiar, Women Remarriage, Social Problems

## முன்னுரை

பாரதியார் பெண்களைப் பற்றியும், அவர்கள் பிரச்சனைகளையும் பாடும் போது பெண்கள் நாட்டு விடுதலைக்காகப் போராட வேண்டும் என்றும் அவர்களின் விடுதலைக்காகப் போராட வேண்டும் என்றும் பாடினார். மேலும், பெண்களைத் தாய்மை எனம் சக்திக் குறியீடாக உயர்த்தியும் பாடியுள்ளார். ஆனால் பாரதிதாசன் பெண்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளைக் கூர்ந்து நோக்கிப் பெண்களின் சமூகப் பிரச்சனைகளான கைம்மைக் கொடுமை, மூடத்திருமணம். பால்ய மணம் போன்றவற்றைப் பகுத்தாய்ந்துப் பாடுகின்றார். சமுதாயத்தில் பெண்களுக்கு நேர்ந்துள்ளக் குறைபாடுகளை களைய முற்பட்டார் பாரதிதாசன். பொதுவாக சமுதாயத்தில் ஆண்கள் செய்யும் செயல்களை எல்லாம் நியாயப்படுத்திக் காட்டுதலை விரும்பாது ஆண்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறார்.

ஆணுக்கொரு நீதியும் பெண்ணுக்கொரு நீதியும் பேசும் தற்காலச் சமுதாயம். கணவனை இழந்த பெண்களுக்காக இழைத்திருக்கும் கொடுமைகளைக் கண்டு குமுறும் கவிஞர் சிந்தனைச் சிதறல்கள் தான் கைம்மைப் பற்றி அவர் படைத்திருக்கும் பாடல்கள். இம்மை உலகில் ஆணைப்போல பெண்ணும் எல்லா இன்பங்களையும் குறைவின்றி நுகர்தல் வேண்டும் என விழையும் கவிஞர் தம் பாடல்களின் பாடு பொருண்மைகளின் முதன்மைக் கூறுகளில் ஒன்றாக விதவை மறுமணத்தை கொண்டதில் வியப்பில்லை

பாவேந்தர் 1930-இல் வெளிவந்த "புதுவை முரசு" என்னும் இதழில் பெண்களின் அவல நிலையைப் பொருண்மையாக வைத்து,

1. மாந்தோப்பில் மணம் (புதுவை முரசு-10.11.1930), 2. கைம்மைப்பழி (புதுவை முரசு - 19. 10.1931), 3. கைம்மைக்கொடுமை (புதுவை முரசு-12.10.1931), 4.குழந்தை மணத்தின் கொடுமை (புதுவை முரசு-24.11.1930), 5. கைம்பெண் நிலை (புதுவை முரசு - 16.11.1930), 6. இறந்தவன் மேற்பழி (புதுவை முரசு - 9.11.1931), 7. கைமைத்துயர் (புதுவை முரசு - 2.11.1931), 8. கைம்மை நீக்கம் (புதுவை முரசு - 26.10.1931), கவிதைகளை வகுத்துச் சுட்டியுள்ளார். மேலும், பாரதிதாசன் தன் பாடல்களில் மூவகையான கைம்பெண்களைச் சுட்டிக் காட்டுகிறார். குழந்தைப் பருவத்தில் மணமுடித்துக் கைம் பெண் ஆவாள். இளைஞனை மணந்து காலத்தின் கோலத்தால் கைம்பெண்ணானவள்

## குழந்தை மணம்

குழந்தை மணத்தின் கொடுமை என்னும் கவிதையில் குழந்தை மணத்தின் கொடுமைப்பால் கணவனை இழந்து ஒரு சிறுமிப் படும் அவல நிலையைக்கான முடியும். அக்குழந்தையின் தன்மையை

"கூவத்தெரியாத குயிலின் குஞ்சு

தாவாச் சிறுமான் மோவா அரும்பு

தாலியறுத்துத் தந்தையின் வீட்டில்

இந்தச் சிறுமி இருந்திடு கின்றாள்"

என்ற வரிகளின் மூலம் அறியலாம் (Bharathidasan, 2009). கைம்மை நிலையில் சிறுமி துயரப்படும் போது அவளின் தந்தை மட்டும் மறுமணம் செய்து கொண்டு, விதவைப் பெண் எதிரில் வந்தால் "நீ போ என்ற புருவம் நெறிப்பதோ?" இதைப் பாவேந்தர்

"இந்நிலைக்கு இவ்வாறு அழுதாள். இவளது

பின்நிலை எண்ணிப் பாட்டிபெரிதும்

அழுத கண்ணீர் வெள்ளம் - அந்தக்

குழந்தை வாழ்நாட் கொடுமையிற் பெரிதே"

இவ்வாறு கூறி வருந்துகிறார் (Bharathidasan, 2009).

## பொருந்தா மணம்

குழந்தை மணக் கொடுமைகளையும், கிழவனுக்கும், குமரிக்கும் நடைபெறும் பொருந்தாத மூடத்திருமணக் கொள்கையும் சமுதாயத்திலிருந்து நீக்கப்படல் வெண்டும். மூடத்திருமணத்தின் விளைவால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் துயரத்தை இவ்வரிகளின் மூலம் அறியலாம் (Bharathidasan, 2009).

"என் மகள் கிழவன் அருகில் இருந்தாள்

சிவந்த கன்னத்தால் விளக்கொளி சிவந்தது

கண்ணீர் பெருக்கால் கவின் உடை நனைத்தாள்

தொண்டு கிழவன் விழிப்பான் என்று

கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்

காதலும் தானம் கனலும் புழுவுமாய்"

தற்கொலைக்கும் முயல்கிறாள். தாய் தடுத்து ஏசுகின்றாள் (Bharathidasan, 2009).

"மண்ணாய் போக மண்ணாய்ப் போக

மனம் பொருந்தா மணம் மண்ணாய் போக (Bharathidasan, 2009)

## கைம்பெண்களின் நிலை

விதவைப் பெண்களின் மன உணர்வுகளைச் சமூகத்தினர் மதிக்காமல் உள்ள நிலையை எண்ணி,

"மண்டவன் மாண்ட பின்னர் - அவனின்

மனைவியின் உள்ளத்

ஆண்டையர் காண்பதில்லை - ஐயகோ

அடிமைப் பெண்சதியே"

எனும் அடிகளின் வாயிலாகத் தமது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறார் (Bharathidasan, 2009).

ஒரு பெண் பிறந்து வளர்ந்து ஒருவனுக்கு மணம் முடித்தால், அவனோ பாதியிலே அவளை விட்டு, இறந்து விட்டால் அப்பெண்ணின் கதியென்ன என்பதை, "விதவைகள் கணவன் இறந்தவுடன், நாண், நல்லாடைகள், மலர், குங்குமம் முதலியவற்றை இழப்பதைச் சுட்டிக்காட்டி, ஆணாலும் கைம்பெண்ணின் பெண்ணுடலும் இன்னுயிரும் போகவில்லையே" என்றுக் கேட்கும் இடத்தில் விதவைப் பெண்களின் மன உணர்வைக் குறித்துப் படம்பிடித்துக் காட்டுகிறார் (Nadarajan, Kanjana, 2012). எனற் கருத்தை ஆலிஸ் குறிப்பிடுகின்றார். காதலைத் தீயீத்த கட்டுப்பாடு எனும் கவிதையின் மூலம் விதவைப் பெண்ணின் உள்ள வேதனையைக் கவிஞர்,

"ஆடவரின் காதலுக்கும் பெண்கள் கூட்டம்

அடைகின்ற காதலுக்கும், மாற்ற முண்டோ?

பேடகன்ற அற்றிலைப் போல மனைவி செத்தால்

பெருங்கிழவன் காதல் செயப் பெண்கேட்கின்றான்.

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்

மணவாளன் இறந்தால் பின் மணத்தா தீதோ?

வயது முதிர்ந்த ஆண்கள் கூட மனைவியை இழந்தால் மறுகணமே மறுமணம் செய்யப் பெண் கேட்கின்றனர் (Bharathidasan, 2009). ஆனால், கணவன் இறந்து பின்னர் பெண்கள் மறுமணம்செய்து கொண்டால் தீதோ? என்று வினாத் தொடுக்கிறார் (Bharathidasan, 2009),

"ஒரு ஜீவனைப் பட்டினியாகப் போட்டுக் கொல்வதிலும், ஒரு பெண்ணை விதயாக வைத்துச் சாகாமல் காப்பாற்றுவது கொடுமை அல்லவா? என்று சமூகத்தில் நிலவும் கைம்பெண்களின் நிலையைக் கூறும் பெரியாரின் கருத்து இதற்கு அரண் சேர்க்கிறது (Thangamarasan, 2012).

பெரியாரின் சிந்தனையை ஒப்புக் கொண்ட பாரதிதாசன், தாயொருத்தி தன்மகளுக்குக் கூறுவதாக,

"மணம் செய்து கொள்வதில் வெறுப்பென்ன? இங்கு

வாழ்வாங்கு வா மறப்பென்ன?

குணமொன்று பொருள்ள மட்டும் இருப்பது போல

மணம்தன் உயிருள்ள மட்டும் இருந்தாது வேண்டும்

மறுமணமில்லாத பெண் கெடுவதும் கூடும்

குறைபாட்டைத் திரைபோட்டு மறைந்திட வேண்டாம்.

கூறினேன் நீ இதை எண்ணிட வேண்டும்"

என்று ஒரு தாய் தன் மகளின் நிலையைக் கண்டு மனம் நொந்து மறுமணம் புரிந்து கொள் எனக் கூறுவதாக்க் தேனருவி என்னும் பாடலின் மூலம் குறிப்பிடுகிறார் (Bharathidasan, 2009).

"கைம்பெண் நிலை என்னும் கவிதையில் மூலம் கைம்பெண்ணின் நிலையை கூறுகையில்

"தாலியற்றவள் - மேலெழுந்திடும்

வேலின் அக்கிரமம் - ஞாலம் ஒயுமோ

வருந்தாமல் கைம்பெண் முகம்

திருந்துமோ இச்சமூகம்

மறுமணம் புரிவது - சிறுமைஎன் ற்றைவது

குறுகிய மதியென - அறிஞர்கள் மொழிகுவர்"

என்று கூறுகிறார் (Bharathidasan, 2009). மறுமணம் புரிவது மிகக் கேவலம் என்று கூறுவது மதியில்லாதவர்களின் கூற்று எனச் சாடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். திரு.வி.க. கூறும் போது, விதவைப் பெண்களின் துயர் அகற்றுவதில் நாட்டில் பிறந்த ஒவ்வொருக்கும் ஊக்கம் பிறக்க வேண்டும். விதவை பெண்களின் சிறுமை நோய் நீத்தும் பெண்ணுலகின் முன்னேற்றத்துக்காகப் பெருவாழியாக அமையும் எனக் குறிப்பிடுவது நினைவில் கொள்ளத் தக்கது.

துணையை இழந்த பெண்களுக்குக் காதல் என்பது பொய்யோ, அணையாது காதலினை அணைக்கச் சொன்னீர் அணை கடந்தால் உங்கள் தடை எந்த மூலை? என்றும் பெண்ணுக்கு என்று தனிநீதியை வைத்துக் கொண்டு இச்சமூகம் இயங்குவதைக் கண்டிக்கிறார் பாரதிதாசன்.

"கைம்மைத் துயர் என்னும் கவிதையில்,

"மாலையிட்ட மணவாளன் இறந்துவிட்டால்

மங்கை நல்லாள் என்ன செய்வாள்? அவளை நீங்கள்

ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்

அணுவளவும் அடையாமல் சாகச் செயதீர்

துணையிழந்த பெண்கட்குக் காதல் பொய்யோ

சுகம் வேண்டா திருப்பதுண்டோ அவர்கள் உள்ளம்?

என்று வினா எழுப்புகிறார் (Bharathidasan, 2009).

## மறுமணம்

கணவனை இழந்த கைம்பெண்ணே இச்சமூகத்தில் உலவும் மூடப்பழக்கத்தை விட்டொழிந்து உன் பகுத்தறிவால் மறுமணம் புரிந்து கொள் அச்சம் வேண்டும் என்றும், துணிந்து மணம் புரிந்து கொள் என்று பின்வரும் அடிகளின் மூலம் அறிவுரை கூறுகிறார்.

"கற்கண்டு போன்ற பெண் கணவனை இழந்தால்

கசந்த பெண் ஆவது விந்தைத்தான் புவிமேல்!

சொற்கண்டு மலைக்காதே உன்பகுத் தறிவால்

தோஷம், குணம் அறிந்து நடப்பாய் - துயர் கடப்பாய்

துணை பிடிப்பாய் - பயம் விடுப்பாய்"

திரு.வி.க அவர்கள் விதவை மறுமணத்தைப் பற்றிக் கூறும் போது, “இச்சமுதாயம் கைம்பெண்களை வீணாகக் கட்டுபாடுகளுக்கு உட்படுத்தி கேவலமாக நடத்துவது பெரிய பாவமாகும். இப்பாவங்களை நிகழ்த்தி வரும் நாட்டிற்கு உயர்வும், உரிமையும் கிடைப்பது அரிது” எனக் குறிப்பிடுவது இங்கே நினைவு கூறத்தக்கது (Kalayanasundaranar, 2012).

விதவைகள் மறுமணம் புரிந்து கொள்வதை எதிர்த்து, சமூகத்தினர் தெரிவிக்கும் எதிர்ப்பு குரலைத் தகர்க்க வேண்டும் என எண்ணிய பாரதிதாசன்,

“கோரிக்கை அற்று கிடக்குதண்ணே இங்கு

வேரிற் பழுத்த பலா - மிகக்

கொடியதென் றெண்ணிப் பட்டதண்ணே குளிர்

வடிகின்ற வட்ட நிலா”

என்று கூறி உள்ளம் குமுறுகிறார் (Bharathidasan, 2009).

“விதவைத் திருமணம் என்கிற சொல் நம்முடைய பெண்கள் விஷயத்தில் சொல்லப்படுவதில்லை. எப்படி இந்த அம்மைக்கு ஒரு கணவன் இருந்து அவர் காலமான பிறகு இன்னொரு கணவனை மணந்து கொள்ள உரிமை இல்லை என்று ஏன் கூறவேண்டும். ஆண்கள் தன் மனைவி இறந்தால் மறுகல்யாணம் செய்வதை விதவைத் திருமணம் என்கிறார்களா? விதவன் என்று தானே கூறவேண்டும்” என்று பெரியார் கூறுவது நினைவில் கொள்ளத்தக்கது (Bharathidasan, 2009).

கைம்பெண்ணின் மறுமணத்தைச் சமூகம் ஏற்காவிட்டாதும் அதற்கு அஞ்சாமல் மறுமணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற பெண்ணியச் சிந்தனையை பாரதிதாசன் வற்புறுத்துவதை இதன் மூலம் அறிய முடிகிறது.

## ஆண்களின் ஒத்துழைப்பு

கைம்பெண்கள் மறுமணம் புரிந்து கொள்ள ஆண் சமூகம் மறுமணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். இச்சமுதாயம் ஏற்றுக் கொண்டால் ஒழிய இவ்வழக்கம் ஒழியாது என்று எண்ணிய பாரதிதாசன் தமது படைப்புகளின் மூலம் இக்கொள்கையை வலியுறுத்துகிறார்.

மணவாளனைப் பறிகொடுத்த மங்கையைக் கைம்பெண் என்று கூறி அவளைச் சமூகத்திலிருந்து பிரிப்பது தவறு. கைம்மை நிலையை நீக்க வேண்டும் என்று ஆடவர்களே ஊக்குவிப்பதாக கைம்மை நீக்கும்” என்னும் தலைப்பில் பாரதிதாசன்,

“கைம்பெண் என்றெண்ணங் கொண்டே

கலங்கினா யோகள் கண்டே?

காடு வேகுவதை ஒரு மொழியினில்

மூடு போட முடியுமா உரையடி? இத்ததி

பைந்தமி ழைச்சீராகக்

கைம்மெ என் னும் சொல் நீக்கப்

பறந்து வாடி அழகிய மயிலே!

இறந்த கால நடைமுறை தொலையவே”

எனும் பாடலின் மூலம் வலியுறுத்துகிறார் (Bharathidasan, 2009).

“பாவை தாலி அறுந்திடல் மூர்க்கம்

பட்டம் முண்டை என்றீதலும் மூர்க்கம்

ஏவு மற்ற இழிவுகள் மூர்க்கம்

எல்லாம் வீழ்த்த இளைஞர் எழுமின்"

என்று விதவைப் பெண்கள் மீது சுமத்தப்படும் அநீதிகளை மூர்க்கமெனச் சாடும் இவற்றை வீழ்த்திட இளைஞர்களை அழைக்கிறார் (Kalayanasundaranar, 2012). இக்கருத்து இங்கே நினைவுகூரத்தக்கது.

கைம்பெண்கள் மறுமணம் இயலாமற் போகும் சூழலுக்குச் சமுதாயத்தில் ஆடவர்களே காரணம் என்பதைக் கண்டறிந்து பாவேந்தர் தன் கருத்தைக் கூறும் முறையினின்று சற்று மாறி, "இறந்தவன் மேல் படி" என்ற கவிதையில் இறக்கும் தருவாயில் இருக்கும் கணவன் ஒருவன் தானே முன்வந்து,

"கடும்பணி யாளன் நான் இறந்தபின் மாதே!

கைம்பெண்ணாய் வருந்தாழுக, பழிஎன்றன் மீதே

ஆடஞ்செய்யும் வைதிகம் பொருள் படுத் தாதே

ஆசைக் குரியவனை நாடு - மகிழ்வோடு - தான்

நலம் தேடு"

என்று ஆடவர்கள் மறுமணத்திற்கு ஒப்ப வேண்டும் என்னும் கருத்தை இவ்வடிகளின் மூலம் கூறுகிறார் (Bharathidasan, 2009). தந்தை பெரியார் மறுமணத்தைப் பற்றி,

ஒருவன் கல்யாணமே ஆகாமல் இருந்தால் கலியாணம் ஆகாத, பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம். அது தப்பில்லை. ஆனால் கல்யாணம் தவறிப்போய் இரண்டாவது கலியாணம் செய்து கொண்டால் அதுபோலவே ஒரு கலியாணம் ஆகி, கணவன் தவறிப் போன வெண்ணையே கல்யாணம்செய்து கொள்ள வேண்டும்" என்று கூறுகிறார் (Veermani, 2015). தன்னுடைய குடும்பத்திலே விதவை மறுமணத்தை ஆதரித்த பெருமைக்குரியவர் தந்தை பெரியார் ஆவார்.

பெரியாரின் ஒப்பற்ற சிந்தனையை தம் பாடலின் மூலம் எடுத்துக் காட்டுகிறார் பாரதிதாசன்.

"கிழவன் மணம் கேட்டான் அஃதியற்கை

தண்ணொத்தா மூத்தாளைத் தாண்தேட வேண்டும் இள

மின் னொத்தாள் வேண்டும் எனல் தீது"

என்று தம் பாடலின் மூலம் கூறுகிறார் (Bharathidasan, 2009). மேலும்,

"இழக்க இழக்கப் புதுப்பெண் தேடும் ஆடவர் கண்வனை

இழந்த பெண்ணை மணக் கலாகாதா"

என்று கேட்கிறார் (Bharathidasan, 2009). ஆடவருக்கு என்ற ஒரு உரிமை பெண்ணுக்கு என்று ஒரு உரிமையை? சமுதாயத்திலிருந்து அந்நிலை மாற வேண்டும் என வலியுறுத்துகிறார். பாரதிதாசன்.

"பகுத்தறிவான மன்று

பாவை நீ ஏறி நின்ற

பாரடீ உன் எதிரினிறு பழஞ்செயல்

கோரமாக அமிந்தொழி குவதையே

கருத்தொரு மித்த போது

கட்டுக்கள் என்ப தேது

கைம்மை கூறும் அதிசய மனிதர்கள்

செம்மை யாகும் படிசெய் மனதுவை? அடி"

என்று கைம்மை நிலையை நீக்க வேண்டும் என்ற கருத்தை ஆடவர்களே ஒத்துக் கொண்டு ஊக்குவிப்பதாகப் இப்பாடலின் மூலம் கூறுகிறார் (Nadarajan, Kanjana, 2009).

"தமிழ்ச் சமுதாயத்தில் மரபு மீறல் என்பதைப் பற்றிச் சிந்திக்காதவர்களாகவே பெண்கள் வார்க்கப்பட்டிருக்கின்றனர். பல்வேறு துயரங்கள் இழைக்கப்பட்டாலும் கூட எதிர்த்து எதுவும் கேட்கமால் அடங்கி ஒடுங்கிக் கிடந்துவிடுகின்றனர். பெண்கள் சமுதாயம் திணித்து வைத்திருக்கும் அடக்குமுறை நோக்கிலான மரபுசார்ந்த செயல்பாடுகளே இவற்றிற்கான காரணங்கள் என்று ஆலிஸ் கூறும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பாடல்களின் மூலம் கைம்பெண் மறுமணம் ஆடவர்கள் நினைத்தால் இச்சமூகத்திலிருந்து ஒழிக்கலாம் என்று உறுதிபடக் கூறுகிறார் என அறிய முடிகிறது (Bharathidasan, 2009).

## கைம்பெண்ணின் துயர்களைய வழிமுறைகள்

மணவாளனை இழந்த பெண்கள் சமுதாயம் கூறும் மூடப்பழக்க வழக்கங்களைப் பெண்களாகவே பார்த்து நீக்கிவிடவேண்டும். கைம்பெண்களே தமக்கு ஒரு மறுமணம் தேவை என்னால் மணக்கலாம். வேண்டாம் என்றால் அவர்களை வற்புறுத்தக் கூடாது. அது அப்பெண்களின் நோக்கம் உங்களை அடிமைப்படுத்தி ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் சமுதாயத்தை ஓட்டு எனத் தமது பாடலின் மூலம் வலியுறுத்துகிறார்.

"இன்றுளதேசம புதுத்தேசம், மணம்

எங்களிஷ்டம் எனக்கூறியே

அன்னதோர் ஊஞ்சலை உந்தி உயர்ந்துயர்ந்

தாடினர், ஊரனிர் ஓடினர்"

இப்பாடலின் மூலம் கைம்மை மணம் வெற்றி கண்டது எனப் பாடுகிறார் (Bharathidasan, 2009).

கைம்மை நிலையை நீக்கி மறுமணத்தை ஆதரித்தால் இச்சமுதாயம் முன்னேறும் நாடும் உயரும் என்பதில் ஐயமில்லை என வலியுறுத்துகிறார்.

## முடிவுரை

நம் நாட்டில் பெண்கள் நிலைமையானது மிகவும் வருந்தத் தக்க நிலையில் உள்ளது. பாதம் முதல் உச்சி வரை முழுதுவம் திருத்தம் செய்யப்படவேண்டும். பெண்களின் அடிமைதனத்திற்கு நம் நாட்டு மூடப்பழக்கவழக்கங்களே காரணம் என்ற சொல்ல வேண்டும் பெண்களின் இந்த நிலைமையை மாற்ற பாவேந்தர் பாரதிதாசன் பெரியாரின் பகுத்தறிவும் சிந்தனைகளோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பாடுபட்டு உழைத்து வெற்றி கண்டவர் எனக் கருதலாம். பெண் சமுதாயத்தை முழுவதும் திருத்த முடியாவிட்டாலும் ஓரளவு படித்த பெண்களிடம் சீர்த்திருத்த உணர்வு ஏற்பட்டுள்ளது. விதவை மறுமணம் ஏற்றக் கொள்ளப்பட்டுள்ளமையைக் குறிப்பாகச் சுட்டலாம். தமது படைப்புகளின் மூலம் கைம்பெண் மறுமணத்திற்கு விதை ஊன்றியவர் பாவேந்தர் பாரதிதாசன் எனக் கொள்ளலாம்.

## References

Bharathidasan, (2021) Bharathidasan Kavithaikal, New Century Book House, Chennai, India.

Kalayanasundaranar, T.V. (2012) Pennin Perumai Allathu Vazhkai Thunai, Gowra Puthaga Maiyam, Chennai, India.

Nadarajan, T., Kanjana, R. (2012) Bharathidasan Padaippukalil Vilipunarvu Sinthanaikal, Saradha Pathippagam, Chennai, India.

Thangamarasan, (2012) Bharathidasan Padalkalil Periyarin Sindanaikal, Kavya Veeliyeedu, Chennai, India.

Veermani, K. (2015) Periyar Kalanjiyam, Suyamariyathai Veliyeedu, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License